குடியிருப்புகளைப் புதுப்பித்தல்

***541—திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், பத்திரபல்லி ஊராட்சியிலுள்ள நரிக்குறவர் குடியிருப்புகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், பத்திரபல்லி ஊராட்சியில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 1993–1994 ஆம் நிதியாண்டில், மத்திய அரசின் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், நரிக்குறவர்களுக்கென தனியே தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, 22 ஆண்டுகள் ஆகின்றன. பழுதடைந்த வீடுகளைப் பராமரிக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு வீட்டுக்கு ரூ.50,000/– என நிதியொதுக்கீடு செய்து, பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தான் வாழ்கின்ற காலம் வரை மக்களுக்காகவும், மக்கள் நலனுக்காகவும் வாழ்ந்து, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திசைநோக்கி வணங்குகிறேன்.*

"எல்லோர்க்கும் நல்லவரா இருப்போமுங்க,
எங்க கொள்கையிலே எந்நாளும் மாறமாட்டோம்,
நரிக் கொம்பு வித்தாலும் விப்போமுங்க,
ஆனால், நரிபோல வஞ்சனைகள் செய்யமாட்டோம்"

என்று புரட்சித் தலைவரும், (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் அம்மா அவர்களும், நரிக்குறவர் சமுதாயத்தின் மேன்மையை பாடல் வரிகளாக நமக்கு அளித்துள்ளனர்.

முற்பகல் 10—20

மாண்புமிகு அம்மா அவர்கள் 1993—1994 ஆம் ஆண்டு பேர்ணாம்பட்டு வட்டம், பத்திரபல்லி கிராமத்தில் நரிக்குறவ சமுதாய மக்களுக்காக கச்சா வீடுகளைக் கட்டித் தந்தார்கள். அந்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டபின் தற்போது 23 ஆண்டுகளாகிவிட்ட நிலையில் மிகவும் பழுதடைந்துள்ளன. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, நான் சார்ந்துள்ள குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு ஒன்றியம், பத்திரபல்லியில் வசிக்கும் சுமார் 50 நரிக்குறவர் சமுதாயக் குடும்பங்களுக்கு புதிய குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்யுமா என தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நல்லதொரு ஆணையை வழங்கியுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.50,000/— வழங்கினாலும்கூட அந்த வீடுகள் முழுமை பெறாத நிலையில் இருக்கும். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்புத் திட்டத்தின்கீழ், அந்த 50 நரிக்குறவ குடும்பங்களுக்கு குடியிருப்புகளை அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் வீடுகள் கட்டித் தருவதற்காக முதலில்

2017 ஜூன் 15]

ரூ.25 ஆயிரம் ஒதுக்கப்பட்டது. பின்னர், இந்த மாதிரியான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை ரூ.50,000/— ஆக உயர்த்திக் கொடுத்தார்கள். அப்படியிருந்தாலும்கூட, அந்த வீடுகள் மிகவும் பழுதடைந்திருக்கும்பட்சத்தில், விதிகளின்படி, அதே பெயரிலே திரும்பவும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியாது. இந்த வீடுகள் மிகவும் பழுதடைந்து, புதுப்பிக்க இயலாத நிலையில் இருந்தால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு அதே இடத்திலோ அல்லது பட்டாவுடன்கூடிய வேறு இடத்திலோ புதிதாக வீடுகளைக் கட்டித் தர ஏற்பாடு செய்யப்படும். அவர்களுடைய மகனோ அல்லது மகளோ இருந்தால், அதே இடத்தில் கொஞ்சம் இடம் அதிகமாக இருந்தால்கூட அவர்களுடைய பெயரிலே வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம். இல்லையென்றால், வேறு இடத்தில் பட்டா நிலம் இருந்தால்கூட அந்த இடத்திலே குடியிருப்புகளைக் கட்டிக் கொடுக்கலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்வாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள நரிக்குறவர் மக்களின் துயர் துடைக்க இசைந்துள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அம்மாவின் இந்த ஆட்சியை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதியில் அடங்கிய 179—வது வார்டிலுள்ள சேவா நகரில் 1996 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்கள் சென்னை மேயராக இருந்தபோது, இப்பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களின் நலனுக்காக ஒரு சமுதாயக் கூடத்தைக் கட்டி, திறந்து வைத்தார்கள். 1996 ஆம் ஆண்டு முதல்*

2011 ஆம் ஆண்டு வரை சிறப்பாக இயங்கி வந்த இந்தச் சமுதாயக்கூடம், கடந்த 6 ஆண்டுகளாகப் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. வாக்குப் பெட்டிகள் வைக்கும் கிடங்காக உபயோகிக்கப்பட்டு, மக்கள் பயன்பாடற்று இருக்கிறது. இதுகுறித்து தேர்தல் ஆணைய அதிகாரி திரு. ராஜேஷ் லக்கானி அவர்களையும், Chennai Corporation Commissioner அவர்களையும் சந்தித்து கோரிக்கை மனுக்களை அளித்துள்ளேன். அவர்களும் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார்கள். எனவே, ஏழை மக்களுக்காகக் கட்டப்பட்டு, தளபதி அவர்களால் திறக்கப்பட்டு, பலருக்கு பயன்பெற்று வந்த அந்த சமுதாயக்கூடத்தை உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியாகும். கிராமத்தில் வாழும் ஏழை மக்களுக்காக, தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பது சம்பந்தமான வினாவாகும். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாநகராட்சி ஆணையரை அழைத்து, பூட்டியிருக்கும் சமுதாயக்கூடத்தை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதும், 2006 ஆம் ஆண்டு தளபதியார் அவர்கள் துணை முதல்வராக இருந்தபோதும் என்னுடைய தொகுதியான செஞ்சி நகருக்கு, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்து செயல்படுத்தினார்கள். இந்தத் திட்டம் இன்று வறட்சியின் காரணமாக, தென்பெண்ணையாற்றில் இருக்கின்ற மூன்று கிணறுகளில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மஸ்தான், தொகுப்பு வீடுகள் கட்டுவது சம்பந்தமான கேள்வியைக் கேளுங்கள். உங்களுடைய தொகுதியில் ஏதாவது தொகுப்பு வீடுகள் பழுதடைந்திருந்தால் அதுசம்பந்தமான கேள்வியைக் கேட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். உள்ளாட்சி சம்பந்தமான வினாவில் நீங்கள் வேறு கேள்வியைக் கேட்டால் எப்படி?*

திரு. கே.எஸ். மஸ்தான்: *இதுவும் உள்ளாட்சித் துறைக்கு சம்பந்தப்பட்ட கேள்வியாகும். குடிநீர் சம்பந்தப்பட்ட கேள்விதான். வேறு ஒன்றும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குடிநீர் சம்பந்தமான கேள்வியென்றால் கேளுங்கள். உங்களுக்கு பேச வாய்ப்பு தந்திருக்கிறேன், அதை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *தென்பெண்ணையாற்றில் 3 கிணறுகள் இருக்கின்றன. அதில் இரண்டு கிணறுகளில் இப்போது தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. எனவே, நகரத்தில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க செஞ்சி நகரத்திலுள்ள* 'B' *ஏரியில் ஒரு திறந்தவெளிக் கிணறும், பொன்பத்தி ஏரியில் ஒரு திறந்தவெளிக் கிணறும் மற்றும் தென்பெண்ணையாற்றில் ஒரு கிணறும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மஸ்தான், இதுசம்பந்தமான கேள்வியை தனியாகக் கேளுங்கள். வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கனகராஜ், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

நீதிமன்றம் அமைத்தல்

***4666—திரு. ஆர். கனகராஜ்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—